**தலைப்பு 302 - கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு - 302 கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடனான 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானம் பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| நிதி செயலாற்றல் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டிற்கான வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்கனவுகள் ரூபா 106,868 அதிகரித்தும் முற்பணக் கணக்கு பெறுவனவுகளும் முற்பண கொடுப்பனவுகளும் ரூபா 106,868 குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் கணக்கு பதிவுகளை பௌதீகரீதியாக மற்றும் கணனி ரீதியாக ஆகிய இரண்டு முறைமைகளிலும் சரியாக உள்ளடக்குவதற்கும் நிதிக்கூற்றுக்களை அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தயாரிப்பதற்கும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வழிகாட்டிக் கோவைகளின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் 02 சொத்துக்கள் குறியீடுகள் சம்பந்தமாக முன்னைய ஆண்டிற்கான இறுதி மீதிகளின் மொத்தம் ரூபா 3,846,407 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அக்குறியீட்டின் ஆரம்ப மீதியின் மொத்தம் ரூபா 3,416,990 ஆக ரூபா 429,417 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்கிக்கொள்கிறேன். 2022 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வுச் சபையினால் சிபாரிசு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டில் ஏலத்தில் விற்கப்பட்ட பொருட்களின் கிரயம் ரூபா 429,416.88 ஆகும். அப்பிழையினை திறைசேரி கணக்குகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி சரிசெய்வதற்கு தவறியுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திறைசேரி ஏடுகளின் பிரகாரம் 30201 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் கணக்கில் பணமாக ஆண்டின் போது வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல் முறையே ரூபா 878,808 மற்றும் ரூபா 735,139 ஆக இருந்த போதிலும் ACA 5 படிவத்தில் ரூபா 771,940 மற்றும் ரூபா 628,271 ஆக ரூபா 106,868 குறைத்து வரவு மற்றும் செலவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்கிறென். | சரியாக கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 1301, 1302 மற்றும் 1303 ஆம் இலக்க செலவு விடயங்களில் முறையே 60 சதவீதம் 82 சதவீதம் மற்றும் 100 சதவீதமாக சேமிப்புக்கள் காணப்பட்டதனால் நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பராமரிப்பு மற்றும் திருத்தம் செய்தல் செலவுகளும் கடன் வட்டியும் எதிர்பார்த்தவாறு ஆண்டில் இடம்பெற்றிருக்கவில்லை. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான ரூபா 33,440 தொகையான மின்சார பட்டியலானது பொறுப்புக்கள் பதிவேட்டில் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் காட்டப்பட்டுள்ள மின்சாரப் பட்டியல் 2023-12-08 இலிருந்து 2024-01-08 வரையான காலப்பகுதி தொடர்பானது என்பதனால் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான பொறுப்புக்களை சரியாக காட்டுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை தொடர்பாக வழங்கப்பட்ட 12(அ) ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் உரிய ஆண்டிற்கு நாளதுவரையாக்கிய நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு, அங்கீகரித்த ஆளணியினர் மற்றும் தற்பொழுது சேவையில் இருக்கின்ற ஆளணியினர் தொடர்பான விபரம் மற்றும் (இ) பந்தியின் பிரகாரம் வருடாந்த செயற்பாட்டிற்கான கட்டுநிதி தேவைப்பாட்டிற்கான திட்டம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆண்டிற்காக நாளதுவரையாக்கிய நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு, அங்கீகரித்த ஆளணியினர், மற்றும் தற்போதுள்ள ஆளணியினர் தொடர்பான விபரம் மற்றும் வருடாந்த செயற்பாட்டிற்கான கட்டுநிதித் தேவைப்பாட்டுத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கிடைத்து தீர்த்துவைக்கப்படாத 13 மேன்முறையீடுகள் சம்பந்தமாக 2023 ஆம் ஆண்டின் போது தீர்வுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட 20 முறைப்பாடுகளில் 16 முறைப்பாடுகளுக்கு மாத்திரம் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் தீர்ப்புக்கள் வழங்கப்பட வேண்டிய 04 முறைப்பாடுகள் இன்னும் காணப்பட்டன. | ஊழியர் முறைபாடுகள் கிடைத்ததன் பின்னர் அந்த முறைப்பாடுகளில் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக ஒரு விபரமான அறிக்கை சங்கத்திடமிருந்து கோருதல் இடம்பெற்றது. ஆணைக்குழுவிற்கு தகவல்களை வழங்குதல் தாமதமடைதல் போன்ற விடயங்களின் காரணமாக சில முறைப்பாடுகளை துரிதமாக விசாரித்து முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. | பிரதான செயற்பாடுகளை துரிதமாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவிடம் 03 வாகனங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரித்த சாரதிகள் எண்ணிக்கை 03 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் உள்ளபடியான அளணியினருக்குள் ஒரு சாரதி மாத்திரம் இருப்பதன் காரணமாக குழாமிலுள்ள செயற்பாட்டில் ஈடுபடுத்த்படுகின்ற 02 வாகனங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டன. | சாரதி வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு பல சந்தர்ப்பங்களில் வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தும் அதற்காக சாரதிகள் இணைத்துக் கொள்ளப்படாமையின் காரணமாக அலுவலகத்திலுள்ள குழாம் வாகனங்களை முறைப்படியாக செயற்படுத்துதல் சிக்கலாக உள்ளது. | சொத்துக்களை முறைப்படியாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து எரிபொருள் பரீட்சிப்பிற்குப் பின்னரும் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25000 கிலோ மீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் சம்பந்தமான பிரதான பழுதுபார்த்தலின் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் வாகனங்கள் சம்பந்தமாக அவ்வாறான எரிபொருள் நுகர்வு பரீட்சித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் எரிபொருள் நுகர்வினை பரீட்சித்தலினை முறைப்படியாக மேற்கொள்வதற்காக தேவையான அலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை முறைப்படியாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |